# கடவுளைத் தேடி...

இப்போதெல்லாம் நாத்திகம் பேசுவது ஒரு வித நாகரிகமா இந்தக் காலத்து இளசுகளுக்கு போய்விட்டது என்று அலுத்துக் கொண்டே என்னிடம் கூறினார் ஒருவர். நாத்திகம் பொல்லாதது என்றார் மற்றொருவர். நாத்திகர்களை ஏதோ திரைப்படங்களில் வரும் வில்லன்களைப் பார்ப்பது போல் பார்க்கும் மனோபாவமும் ஒரு சிலருக்கு இருக்கின்றன.

ஒரு விடயத்தை இவர்கள் எல்லோரும் வசதியாக மறந்து விட்டார்கள். நாத்திகம் இன்று நேற்று தொடங்கியது அல்ல. உண்மை என்ன வெனில் கடவுள் இருக்கிறார் என்ற கருத்து இந்த உலகத்தில் தோற்றம் பெறும்போதே கடவுள் இல்லை என்ற கருத்தும் தோற்றம் பெற்றுவிட்டது. கடவுள் மறுப்பாளர்கள் கி.மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வாழ்ந்திருக்கிறார்கள்.

வெறும் வரட்டுத் தத்துவத்தின் அடிப் படையில் நாத்திகம் தோன்றி விடவில்லை. சிந்தனையின் வளர்ச்சிப் போக்கில்தான் அதுவும் பரிணாமித்திருக்கிறது. உலகப் புகழ் பெற்ற கிரேக்கத் தத்துவ ஞானி களான பிளாட்டோ, அரிஸ்டோட்டில், சோக்ரடீஸ் போன்றவர்கள் கடவுள் மறுப்பாளர் களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். மார்க்சியத் தின் பொருள் முதல்வாதக் கோட்பாடு கடவுளை மறுக்கிறது.

தத்துவஞானிகள் பொதுவாக கருத்து முதல் வாதிகளாகவும் பொருள் முதல்வாதி களாகவும் இருப்பார்கள். தத்துவத்தின் அடிப்படையே இந்த இரண்டிலும்தான் தங்கி யுள்ளது. அன்று முதல் இன்று வரை இந்த இரண்டிற்கும் கருத்துப் போர் நடைபெற்ற வண்ணம் உள்ளது. சரியான முடிவு இன்னும் கிடைக்கவில்லை. இருப்பினும் எங்களைப் போன்றவர்களின் அறிவு பொருள்முதல் வாதத்தையே ஏற்றுக் கொள்கிறது. முதலில் கருத்து முதல்வாதம், பொருள் முதல்வாதம் என்றால் என்னவென்று பார்ப்போம்.

இந்த உலகம் கடவுளால் படைக்கப்பட்டது, அவனின்றி அணுவும் அசையாது என்ற நம்பிக்கையின் அடிப்படையில், குறிப்பிட்ட அந்தக் கருத்தை வைத்து பின்னப்பட்ட வாதமே கருத்து முதல்வாதம்.

பொருள்முதல்வாதம் பொருளை அடிப்படை யாகக் கொண்டது. அழகான மலரைப் பார்க்காமல் அது அழகானது என்ற கருத்துத் தோன்ற முடியாது. இனிமையான பாடலைக் கேட்காமல் அது இனிமையானது என அறிய முடியாது. நமது உடலை ஐம்புலன்கள் இயக்குகின்றன. அந்த ஐம்புலன்களையும் மூளை இயக்குகின்றது. காதலுக்கு இதயத்தை குறியீடாகக் காட்டுவது முற்றிலும் தவறானது. காதல் உணர்வென்பது முழுக்க முழுக்க மூளையின் வெளிப்பாடே. அந்தக் கருத்து எவ்வாறு மூளையில் ஏற்பட்டது. ஏதாவது ஒரு திடப் பொருளைப் பார்த்தபின்தானே.

திடப் பொருள் என்றால் என்ன? மரம், கோவில், விமானம், நான், நீங்கள், ஐஸ்வர்யா ராய் என எல்லாமே திடப் பொருட்கள்தான்.

பெண் என்ற திடப் பொருளைப் பார்த்தபின்தான் ஆண் என்ற திடப் பொருளுக்கு காதல் தோன்றுகிறது. பார்க்காமல் தோன்றும் காதல்கூட அந்தத் திடப்பொருள் தொடர்பாக ஏதாவது ஒன்றை அறிந்த பின்தான் ஏற்படுகிறது. எது எப்படிப் பார்த்தாலும் பொருள்தான் முதல் வருகின்றது.

சரி இனி விசயத்திற்கு வருவோம். கடவுள், ஆன்மா போன்றவை திடப் பொருட்கள் அல்ல. புலன்களால் அவற்றை உணர முடியாது. மனத்திற்குள் ஏற்பட்ட கருத்தையும் அதன்பால் ஏற்பட்ட பக்தியையும் வைத்துத்தான் நாம் நமது நம்பிக்கையை வளர்த்து வருகிறோம்.

## சாய்ந்த கோபுரங்கள்

எழுதுவது: **இளங்கோ**

உலகம் வெறும் திடப் பொருட்களால் மட்டும் ஆகவில்லை. திடப் பொருள் சக்தி, இந்த இரண்டையும் கொண்டே உலகம் இயங்கு கின்றது. இயக்கம் என்பது ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளுக்கு ஊட்டப் படுகிறதே தவிர பொருள் இல்லாத ஒன்றிலிருந்து ஊட்டப் படவில்லை. இந்த பிரபஞ்சமும் அப்படித்தான் இயங்குகிறது. ஒரு பொருளை அழிக்கவோ ஆக்கவோ முடியாதென்பது விதி. அதன் வடிவம் மாறுகிறதே தவிர அது அழிக்கப்படுவதில்லை.

எந்த ஒரு கருத்தும் பொருள் இல்லாமல் தோற்றம் பெறுவதில்லை. கருத்தா பொருளா என்ற வாதத்தில் நமது அறிவிற்கு எட்டிய வரை பொருளே முதலில் தெரிகிறது. கருத்து உற்பத்தியாகும் மூளை என்பது என்ன? அதுவும் ஒரு பொருள்தானே. எனவே பொருள் தான் முதலானது என்பது தெளிவாகிறது.

இந்தப்பிரபஞ்சத்தையும் நாம் அவ்வாறுதான் பார்க்கிறோம். இந்தப் பிரபஞ்சத்திற்கு தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. இதன் வடிவம் மாறுமே தவிர இது அழிவற்றது. நிலமை இவ்வாறு இருக்க இதை யார் தோற்றுவித்தார் என்ற கேள்வி தேவையற்ற தாகவே எங்களுக்குப் படுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் போன்ற சொற்றாடர்கள் எங்களுக்கு அபத்தமாகவே படுகின்றன.

இல்லை இது கடவுளால் படைக்கப் பட்டது. அவர் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார், ஆதியும் அவர்தான் அந்தமும் அவர்தான், அனைத்திற்கும் அவர்தான் காரணம் என்றால் அதனை மெய்பிக்கட்டும். ஏற்றுக் கொள் வதற்கு எங்களைப் போன்றவர்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. நாங்கள் கடவுள் இல்லை என்று கூறும் நாத்திகர்கள் இல்லை. கடவுள் இல்லையே என்று கவலைப் படும் நாத்திகர்கள். இன்னும் சொல்லப் போனால் கடவுள் என்று ஒருவர் இருக்கக் கூடாதா என்று ஏங்கும் நாத்திகர்கள்.

கடவுளை மறுத்த பகுத்தறிவுவாதிகளில் பெரும் பாலோரை நாம் அவதானிப்போ மானால் அவர்கள் அனைவரும் சமூக சீர்திருத்தவாதிகளாகவே தென்படுகின்றனர். கடவுளை அவர்கள் எதிர்க்கவில்லை. அவர்களைப் போறுத்தவரையில் இல்லாத ஒன்றை எதிர்ப்பதற்கு அவர்கள் மூடர்கள் அல்ல. ஆதிக்கவாதிகளின் கைப்பாவையாக கடவுள் என்ற கருத்து பரப்பப்பட்டதுதான் அவர்களின் கோபத்திற்கும் போராட்டத்திற்கும் காரணம். சோக்ரடீஸ், புத்தர் முதற்கொண்டு இங்கர்சால், பெரியார் போன்றவர்களின் வரலாறுகளைப் படித்தால் இந்த உண்மை விளங்கும்.

குறிப்பாக பச்சை நாத்திகர் அதுவும் ஈவிரக்கம் கொஞ்சமும் அற்ற நாத்திகர் என பலரால் வசை பாடப்படும் தந்தை பெரியாரின் வரலாற்றை ஆராய்ந்தால் பல வியப்புக்கள் காத்திருக்கின்றன. பார்ப்பான் பஞ்சமன் என்ற சாதிப் பாகுபாட்டை ஒழிப்பதற்காக அவர் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார்.

**நாங்கள் கடவுள் இல்லை என்று கூறும் நாத்திகர்கள் இல்லை. கடவுள் இல்லையே என்று கவலைப் படும் நாத்திகர்கள். இன்னும் சொல்லப் போனால் கடவுள் என்று ஒருவர் இருக்கக் கூடாதா என்று ஏங்கும் நாத்திகர்கள்.**

அப்போது தனது இயக்கத்தின் ஏடான அவர் குடியரசு நாளிதழை தொடங்கியபோது, 'எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக' என்றே எழுதுகிறார். சாதியையும் பிறவிப் பெண்ணடிமைத்தனத்தையும் எதிர்த்த அவர் அப்போது கடவுளில் கைவைக்க வில்லை. சாதிகளைக் கற்பிக்கும் வருணாசிரமத்தத்துவம் இந்து மதத்தின் ஆணிவேர் என்பதை அவர் அறிய நேர்ந்த போது அதனை எதிர்க்கிறார்.

அந்தத் தத்துவங்கள் புண்ணிய ஏடுகளின் பொன் போன்ற கோட்பாடுகள் என பலர் உரைத்தபோது, அந்த புண்ணிய ஏடுகளையே கொளுத்தவேண்டும் என்கிறார். இல்லை இல்லை அந்த புண்ணிய ஏடுகள் கடவுளால் படைக்கப் பட்டவை என்ற போது, 'என்னடா பெரிய வெங்காயக் கடவுள், அவனையே ஒழியுங்கடா' என்கிறார்.

ஆம் பெரியார்கூட நேரடியாக கடவுள் மறுப்பா ளராக மாறவில்லை. சாதியை ஒழிக்க முற்பட்ட அவருக்கு கடவுளைக் காட்டி பேய்காட்ட வெளிக்கிட்டனர் ஆதிக் சாதியினர். அதன்பின் பொருள் முதல்வாதக் கோட்பாடுகளைப் படி த்து பெரியார் தத்துவ அடிப்படையில் நாத்தி கராக மாறினார் என்பது வேறு. ஆனால் அவர் போராட வெளிக்கிட்ட தொடக்கத்தில் அவரது நோக்கம் சாதி ஒழிப்பே தவிர கடவுள் மறுப்பு அல்ல.

நாத்திகனை வைத்து எழுதப்பட்ட ஓர் ஆங்கிலக் கவிதை நினைவிற்கு வருகிறது. கடவுளை நேசிக்கும் மனிதர்களின் பட்டியலில் அவன் பெயர் இல்லை. ஆனால் கடவுள் நேசிக்கும் மனிதர்களின் பட்டியலில் அவன் பெயர் முதலிடத்தில் இருக்கிறது காரணம் அவன் மனிதர்களை நேசிக்கிறான். நாத்திகன் என்றால் கடவுள் மறுப்பாளன் என்பார்கள் என் போன்றவர்களைக் கேட்டால் அவனுக்கும் கடவுள் இருக்கிறது என்றே கூறுவேன் ஏன் அவனுக்கு மதமும் இருக்கிறது. ஆம் அன்புதான் அவனது கடவுள் மனிதநேயமே அவனது மதம்.

### நிறைவாக

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருந்த சாய்ந்த கோபுரங்கள் என்ற இந்த அனுபவப் பதிவை நிறைவு செய்யும் நேரம் வந்து விட்டது. இதில் நான் குறிப்பிட்ட சில விடயங்கள் பலரது மனத்தைக் காயப்படுத்தியிருக்கலாம். நண்பர்களே உண்மை என்றும் கசப்பானது. இவற்றை நான் முதன் முதலாக அறிய நேர்ந்தபோது என க்கும் கசக்கத்தான் செய்தது. இத்தொடரில் எந்த விதமான திரிபுவாதத்தையும் நான் வைக்கவில்லை. நான் அறிந்து கொண்ட உண்மைகளை அப்படியே வெளியிட்டேன்.

பொதுவாக எல்லோரும் கேட்ட ஒரு கேள்விக்கு இப்போது நான் பதிலளிக்கின்றேன். பிற மதங்களை விட்டு விட்டு இந்து மதத்தை மட்டும் தாக்குவது நியாயமா என பலர் கேள்வி எழுப்பியிருந்தார்கள். மேலை நாட்டு பகுத்தறிவாளர்களான இங்கர்சால், டார்வின், பெஞ்சமின் பிராங்ளின் போன்றவர்கள் இந்து மதத்தை எதிர்க்காமல் ஏன் கிறிஸ்தவ மதத்தை எதிர்த்தார்கள் என்று கேட்பது போல்தான் இந்தக் கேள்வியும் உள்ளது.

ஒருவர் வாழும் சமூகத்தை எந்த மதம் பாழ்படுத்தியதோ அதைத்தான் அவர்கள் முதல் எதிர்ப்பார்கள். மேலும் சாதிகளற்ற தமிழ்ச் சமூகத்தில் சாதிய இழிவை இந்து மதம் தான் கற்பித்தது. அது கற்பித்த நான்கு சாதிகள் தான் நாற்பதாய் நானூறாய் கிளை பரப்பி நிற்கின்றன. அனைத்து கிறிஸ்தவர்களும் பைபிள் படிக்க வேண்டும் என்ற கிறிஸ்தவத் திற்கும், அனைத்து முஸ்லீம்களும் குர்ரான் படிக்க வேண்டும் என்ற இஸ்லாத்திற்கும் பிராமணன் மட்டும்தான் வேதம் படிக்க வேண்டும் சூத்திரன் வேதம் படித்தால் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்ற இந்து மதத்திற்கும் எத்துணை பெரிய வேறுபாடு. தமிழ்ச் சமூகத்தில் தோன்றிய பகுத்தறிவாளர்கள் இந்து மதத்தை குறிவைத்துத் தாக்கியதற்கு இதுதான் காரணம்.

ஒருவரின் மனம் புண்படும் என்பதற்காக உண்மையை உரைக்காமல் இருக்க முடியாது. உண்மை மூன்று நிலைகளைக் கடக்கிறது. முதலில் அது நகைப்புக்கிடமாகவும் அடுத்து அது மிகத் தீவிரமான எதிர்ப்புக்குள்ளாகும் விதமாகவும் இறுதியில் தெளிந்த மனதுடன் அதை ஏற்றுக்கொள்ளும் விதமாகவும் அமை கிறது என்று இந்தத் தொடரின் தொடக்கத்தில் நான் குறிப்பிட்ட ஜேர்மன் நாட்டு தத்துவமேதை ஆர்தர் ஸ்கோபென்கார் கூறிய வாரிகளை மீண்டும் நினைவு படுத்தி இந்தத் தொடரை நிறைவு செய்கிறேன்.

பல எதிர்ப்புக்களை எதிர்கொண்ட போதி லும் இப்பதிவை தொடர்ந்து எழுத வைத்த *ஒரு பேப்பர்* நிர்வாகக் குழுவினருக்கும், வாசித்த தமிழ் நெஞ்சங்களுக்கும், தங்களின் கருத்துக் களைப் பதித்து என்னை ஊக்கப் படுத்திய அன்புறவுகளுக்கும் என் மனமார்ந்த நன் றிகள். மீண்டும் ஒரு பதிவில் உங்கள் அனை வரையும் சந்திக்கும் வரை நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி

கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்.... 020 8905 7765

MARUTHI CASH & CARRY



15 - 17
Queensbury Station Parade
Queensbury
HA8 5NR

Tel: 020 8952 66 55
020 8381 3442
Fax: 020 8905 7546